Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 239 | உள்ளூர் - 27.08.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 239 | வெளியூர் - 28.08.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**ஆகஸ்ட் 28 சந்திர கிரகணம்: 12 ராசிகளுக்கு பலன்?**

**சாகித்ய அகாடமியில் 30 பணியிடங்கள்!**

**கள ஆய்வு இல்லாமல் மின் இணைப்பு!**

**பிரபல ஹரியான்வி பாடகர் அங்கித் பால்யான் சுட்டுக்கொலை!**

## எங்களுக்கு அவசரமும் இல்லை; ஈரான் பேச்சுவார்த்தைக்கு திரும்புவதற்கு எந்த காலக்கெடுவும் இல்லை: டிரம்ப்!

வாஷிங்டன், ஆக. 27–



அமெரிக்காவுடனான மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஈரான் பேச்சுவார்த்தைக்கு திரும்புவதற்கு எந்தவொரு குறிப்பிட்ட காலக்கெடுவும் இல்லை; எங்களுக்கு எந்த அவசரமும் இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுடன் பேசுகையில்,

அமெரிக்கா "மிகப்பெரிய வெற்றியைப் பெற்று வருகிறது" என்று கூறிய டிரம்ப், தனது நிலைப்பாட்டை விளக்கும்போது ஈரானில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களையும் சுட்டிக்காட்டினார்.

நாங்கள் இந்தப் போரில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று வருகிறோம். அவர்களுக்கு (ஈரான்) கடுமையான பணவீக்கம் உள்ளது, அவர்களுடைய பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது, அவர்கள் மக்களை மிக மோசமாக நடத்துகிறார்கள். போராடும் மக்களையும் கொன்று குவிக்கிறார்கள் என்றார்.

ஈரான் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப எவ்வளவு கால அவகாசம் அளிக்கப்படுகிறது என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "எங்களுக்கு எந்த அவசரமும் இல்லை, நான் அவசரப்படவும் இல்லை; அவர்களுக்கு எந்தவொரு குறிப்பிட்ட காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை. அவர்கள் எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை" என்று டிரம்ப் கூறினார்.

ராணுவத் தாக்குதல்களைவிடப் பொருளாதார நடவடிக்கைகள் அதிகயளவில் பலனளிக்கின்றனவா? என்று கேள்விக்கு, "இரண்டுமே பலன் அளிப்பதாக நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.

இதற்கிடையே, போர் பதற்றத்தைத் தணிக்கவும் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழலை உருவாக்கவும் ஈரான் அதிகாரிகளைச் சந்திக்க கத்தார் பிரதமர் முகமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜாசிம் அல் தானி வியாழக்கிழமை தெஹ்ரான் பயணம் மேற்கொள்ள இருப்பதாக கத்தார் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மஜித் அல் அன்சாரி தெரிவித்துள்ளார்.

ராஜதந்திர பேச்சுவார்த்தையே கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கும் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் சிறந்த வழியாகும் என்ற கத்தாரின் உறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில் இந்தப் பயணம் அமைகிறது என்று அல் அன்சாரி கூறியுள்ளார்.

மேலும், ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரம் மற்றும் பிப்ரவரி 28–க்கு முந்தைய நிலைக்கு அது திரும்ப வேண்டிய அவசியம் குறித்தும் இந்த விவாதங்கள் அமையும் என்று அவர் கூறினார்.

பிப்ரவரி 28 அன்று வாஷிங்டன் தெஹ்ரானுக்கு எதிராக ராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய ஆறு மாதங்களுக்குப் பிறகு, அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான மோதலைத் தணிக்க கத்தார் மற்றும் பாகிஸ்தான் ஈடுபடும் புதிய ராஜதந்திர முயற்சிகளுக்கு மத்தியில் இந்தக் கருத்துகளும் பயணமும் இடம்பெறுகின்றன.

இதற்கிடையில், நடைபெற்று வரும் ராணுவ நடவடிக்கைகளின் போது கடுமையான காயங்களுக்கு ஆளான போதிலும், ஈரானின் உயரிய தலைவர் மொஜ்தபா கமேனி இன்னும் உயிருடன் இருப்பதாக நம்புவதாக டிரம்ப் கூறியுள்ளார். இதற்கிடையே, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, தற்போதைக்கு ஈரானுக்கு எதிராக புதிய ராணுவத் தாக்குதல்களைத் தொடங்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்று பல நட்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களிடம் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அமெரிக்க – ஈரான் மோதலைத் தணிக்கும் முயற்சிகளில், கத்தார் மற்றும் பாகிஸ்தான் முக்கிய ராஜதந்திர மத்தியஸ்தர்களாகச் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை, ஆழ்வார்பேட்டையிலுள்ள டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில், உலகிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்டுள்ள நுண்துளை கருவிழி சீரமைப்பு மையத்தைத் (PINHOLE PUPILLOPLASTY CENTRE) திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பேராசிரியர் மரு. அமர் அகர்வால், விட்ரியோ–ரெட்டினல் சேவைகள் இயக்குநர் மரு. மனோஜ் கத்ரி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 127 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 36 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 164 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் ஜி. வெங்கடராமன், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித் தேவ் வான்கேடே, சென்னை மாநகர காவல் ஆணையர் அ. அமல்ராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நேபாளத்தில் பேரழிவு வெள்ளம்

# 160 பேர் பலி... 750 பேர் மாயம்! 57 தமிழர்கள் சிக்கியதால் அதிர்ச்சி!

## மீட்புப் பணிகள் தீவிரம்... பெரும் பதற்றம்!!

காத்மாண்டு. ஆக. 27–



திபெத்தில் நேற்று பிரமாண்ட பனிப்பாறை உருகி, அங்குள்ள ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, அதிகளவு நீர் நேபாளத்தில் உள்ள கோஷி ஆற்றில் கலந்து, திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால், வழியில் இருந்த பாலங்கள், கட்டடங்கள், சாலைகள் அடித்துச் செல்லப்பட்டன. இந்த திடீர் பேரழிவில், 160 பேர் பலியாகினர். 57 தமிழர்கள், 133 இந்தியர்கள் உட்பட 750 பேர் மாயமாகியுள்ளனர்.

நம் அண்டை நாடான சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் இருந்து துவங்கும் கோஷி ஆறு, மற்றொரு அண்டை நாடான நேபாளம் வழியாக, நம் நாட்டில் பீஹார், உத்தர பிரதேச மாநிலங் களுக்கு வருகிறது.

மொத்தம், 720 கி.மீ., நீளமுள்ள இந்த ஆறு, பொதுவாக கோஷி என்று அழைக்கப்படுகிறது. திபெத்தில், போய்கு என்றும், நேபாளத்தில் போடே கோஷி என்றும், நம் நாட்டில் கண்டக் நதி என்றும் அழைக்கப்படுகிறது.

திபெத்தில் உள்ள ஜாங்க்ஜாக்போவில் பனிப்பாறைகள் உருகி, மிகப்பெரிய ஏரி உருவாகி உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து, 26,286 அடி உயரத்தில் உள்ள இந்த ஏரியில், நேற்று திடீரென உடைப்பு ஏற்பட்டது. இதனால் மிக அதிக அளவில் நீர், கீழ்நோக்கி பாய்ந்து, கோஷி ஆற்றில் சேர்ந்தது. இதனால் திடீரென, கோஷி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

ஆற்றின் ஓரம் இருந்த வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள், 20க்கும் மேற்பட்ட பாலங்கள், சாலைகள் உள்ளிட்டவற்றை இந்த வெள்ளம் கபளீகரம் செய்தது. திபெத்தை ஒட்டியுள்ள நேபாளத்தின் ரசுவா மற்றும் டாடிங் மாவட்டங்கள் இதனால் கடும் பாதிப்பை சந்தித்தன.

' திபெத்தில் இருந்து பெருவெள்ளம் ஏற்பட்டால் போதிய முன்னெச்சரிக்கை தகவல்கள் கிடைக்காது. நேபாளம், இந்தியா உள்ளிட்ட கீழ்நிலை நாடுகளில் மக்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது' என 2016லேயே மத்திய நீர் ஆணைய தலைவர் கனஷ்யாம் ஜா சுட்டிக்காட்டியிருந்தார். இந்நிலையில், போடே கோஷி மற்றும் அது இணையும் திரிசூலி நதி கரையோரங்களில் உள்ளவர்கள், பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி, நேபாள அரசு அறிவுறுத்தியுள்ளது. வெள்ளப் பெருக்கில் சிக்கி, திபெத்தில் 3 பேரும், நேபாளத்தில் 157 பேரும் என மொத்தம், 160 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 133 இந்தியர்கள் உட்பட 750 பேர் மாயமாகி உள்ளனர். இதில் தமிழகத்தில் சுற்றுலா சென்ற 57 பேரும் அடக்கம்.

நீரில் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்காக, 15க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்களை நேபாள ராணுவம் பயன்படுத்தியுள்ளது. இதன் பலனாக, 3–0க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர். அதே நேரத்தில், 30க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் காணவில்லை என்று கூறப்படுகிறது.

அவசரகால மீட்பு நடவடிக்கைகள் குறித்து, நேபாள பிரதமர் பாலேந்திர ஷா, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதற்கிடையே, தேவையான உடனடி நடவடிக்கைகள் எடுக்க, சீன அதிபர் ஷீ ஜின்பிங்கும் உத்தரவிட்டுள்ளார்.

## சட்டசபை நேரலைக்கு 'பிரேக்'!

சென்னை, ஆக. 27–



சட்டசபை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்யும்போது சில நிமிடங்கள் தாமதமாக ஒளிபரப்ப திட்டமிடப்பட்டு உள்ளது.

தமிழக சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் முடிந்து துறை வாரியாக மானிய கோரிக்கை விவாதம் நடந்து வருகிறது. துறைவாரியாக நடக்கும் மானிய கோரிக்கை விவாதங்களில், எம்.எல்.ஏ.,க்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளித்து வருகின்றனர். அ.தி.மு.க., மற்றும் தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் எழுப்பும் கேள்விகளுக்கு, அமைச்சர்கள் நேரடியாக பதில் தராமல் அரசியல் ரீதியாக பேசுவதால் சபையில் சலசலப்பு எழுகிறது.

சபை காலை 9:30 மணிக்கு துவங்கி மாலை முடியும் வரை நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அதை பல்வேறு 'யுடியூப் சேனல்'கள் நேரடி ஒளிபரப்பு செய்து வருகின்றன. இவற்றை பொது மக்கள் ஆர்வத்துடன் பார்த்து வருகின்றனர்.

சர்ச்சைக்குரிய வார்த்தைகளை சபைக்குறிப்பில் இருந்து சபாநாயகர் நீக்குவதாக அறிவிக்கிறார். ஆனால் அவை நேரடி ஒளிபரப்பில் மட்டுமின்றி, 'ரீல்ஸ்' ஆக வெளியிடப்பட்டு விடுகின்றன. இதனால் தேவையற்ற பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே சபாநாயகர் நீக்கும் வார்த்தைகளை நேரடி ஒளிபரப்பில் இடம்பெறாமல் செய்ய வேண்டும் என தி.மு.க., தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சபை நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை 5 முதல் 15 நிமிடங்கள் வரை தாமதமாக ஒளிபரப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சோதனை முயற்சிகள் நடந்து வருகின்றன. நடப்பு வாரத்திலேயே, இந்த நடவடிக்கை செயல்பாட்டுக்கு வர வாய்ப்புள்ளதாக சட்டசபை செயலக வட்டாரத்தில் கூறப்படுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 27.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 10-ம் தேதி

# விளம்பரத்தை அல்ல, லேபிளை நம்புங்கள்!



"இயற்கை", "ஆர்கானிக்", "100 சதவீதம் தூய்மை" என்ற வார்த்தைகள் நுகர்வோரை எளிதில் கவர்கின்றன. ஆனால், ஒரு பொருளின் தரத்தை அதன் விளம்பரத்தை மட்டும் வைத்து முடிவு செய்வது சரியான அணுகுமுறை அல்ல.

இன்று பால், மாவு, பனீர், கோவா, மசாலா பொருட்கள், சமையல் எண்ணெய், தேன் என அன்றாடம் பயன்படுத்தும் பல பொருட்களிலும் கலப்படம் தொடர்பான சந்தேகங்கள் எழுகின்றன. குறிப்பாக மிளகாய், மஞ்சள் தூள் போன்ற அரைத்த மசாலாக்களில் தரமற்ற பொருட்கள் கலக்கப்படுகிறதா என்பதையும் நுகர்வோர் கவனிக்க வேண்டும்.

அதேபோல், பற்பசை, சோப்பு, ஷாம்பு போன்ற தனிநபர் பயன்பாட்டுப் பொருட்களையும் வெறும் விளம்பரங்களை நம்பி வாங்காமல், அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள் மற்றும் பாதுகாப்புத் தரநிலைகளைப் பார்க்க வேண்டும்.

ஆன்லைனில் உணவு ஆர்டர் செய்வதும் இதற்கு விதிவிலக்கல்ல. உணவு தயாரிக்கப்படும் இடத்தின் சுகாதாரம், சேமிப்பு, பேக்கிங் மற்றும் விநியோகம் ஆகியவை அதன் தரத்தை நிர்ணயிக்கின்றன.

எனவே, நுகர்வோர் விழிப்புணர்வே கலப்படத்துக்கு எதிரான முதல் பாதுகாப்பு. ஒரு பொருளை வாங்குவதற்கு முன்பு மூலப்பொருட்கள், காலாவதி தேதி, தயாரிப்பாளர் விவரம், தரச்சான்று மற்றும் விற்பனையாளரின் நம்பகத்தன்மைஆகியவற்றை சரிபார்ப்பது அவசியம்.

விளம்பரம் கவரலாம்; ஆனால் பொருளின் லேபிள்தான் உண்மையைச் சொல்ல வேண்டும். நுகர்வோர் விழிப்புடன் இருந்தால்தான் தரமான பொருட்களுக்கான சந்தையை உருவாக்க முடியும்.

# நூல் வெளியீட்டு விழா!




மதுரை, ஆக. 27–

மதுரை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்ற நிகழ்வில், கவிஞர் மஞ்சளாக எழுதிய "பெயல் மணக்கும் முற்றம்" என்ற கவிதை நூலை எழுத்தாளரும், கவிஞருமான சக்தி ஜோதி வெளியிட புரட்சி பாவலர் மன்றத் தலைவர் பி. வரதராசன் பெற்றுக்கொண்டார் உடன் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் கவிஞர் மு. செல்லா, மாநிலத் துணைச்செயலர் பா. ஆனந்தகுமார், மாவட்டதுணைத் தலைவர் கவிஞர் பேனா மனோகரன், முனைவர் முருகேசபாண்டியன், முனைவர் லதா, நூலாசிரியர் கவிஞர் ஜி. மஞ்சுளா ஆகியோர் உள்ளனர். அருகில் நிலா இலக்கிய மன்றம் தலைவர் கவிக்குயில் இரா. கணேசன் சிறப்புப்படியாக நூலினை பெற்றுக்கொண்டார்.

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி!




ராமநாதபுரம், ஆக. 27–

ராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பாவை பவுண்டேஷன் சார்பில் மருத்துவப் பயன்பாட்டிற்கான பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு மருத்துவ அலுவலர்கள் டாக்டர் அனுசோபா, டாக்டர் நாக் மணிகண்டன் ஆகியோர் தலைமை வகித்தனர். SHN, VHN, MLHP, மருந்தாளுநர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை பாவை பவுண்டேஷன் ராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கனகராஜ் மேற்கொண்டார். கிராமப்புற மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை கிடைக்க உதவும் வகையில் மருத்துவ உபகரணங்களை வழங்கிய பாவை பவுண்டேஷனுக்கு, சுகாதார நிலைய மருந்தாளுநர் ஆறுமுகம் மற்றும் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் ஆய்வு - அமைச்சர் அருண் ராஜ்!



சென்னை, ஆக. 27–

சட்டசபையில் சமூக நீதித்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை மீதான மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது.

முன்னதாக, சட்டசபையில் உறுப்பினர்களின் கேள்விக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்து வருகின்றனர்.

வேலூர் காட்பாடி ரெயில் நிலையத்தில் இருந்து பாலாறு பாலம் வரை உயர்மட்ட பாலம் கட்ட அரசு ஆவணம் செய்யுமா? என்று எம்.எல்.ஏ. சுதாகர் கேள்வி எழுப்பினார். சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்தார்.

கீழ்வேளூர் ரெயில்வே மேம்பாலம் அமைத்து தரவேண்டும் என பா.ம.க. எம்எல்ஏ லதா கோரிக்கை விடுத்தார். அதற்கு பதில் அளித்த அமைச்சர், பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். திருத்துறைப்பூண்டியில் போக்குவரத்து நெரிசலாக உள்ளதால் ரெயில்வே மேம்பாலம் கட்டப்படுமா? என்று உறுப்பினர் மாரிமுத்து எழுப்பிய கேள்விக்கு, மக்கள் நீண்ட நேரம் காத்திருந்து தண்டவாளத்தை கடந்து செல்வதால் ரெயில்வே மேம்பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்தார்.

தாம்பரம்–செங்கல்பட்டு உயர்மட்ட மேம்பாலம் அமைக்க அதிமுக ஆட்சியில் நடவடிக்கை, கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது.

மேம்பாலம் குறித்து இன்றைய அரசின் தற்போதைய சூழ்நிலை என்ன? என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, செங்கல்பட்டு முதல் சென்னை வரை போக்குவரத்து நெரிசல் அதிகளவில் உள்ளதால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை– கன்னியாகுமரி 8 வழிச்சாலைக்கான பணிகளை தொடங்கியுள்ளோம், திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெறுகிறது என்றார்.

செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் உள்ளிட்ட கூடுதல் நவீன உபகரணங்கள் வழங்கப்படுமா? என பா.ம.க. எம்எல்ஏ கணேஷ் குமார் எழுப்பிய கேள்விக்கு, ஆய்வு செய்து தேவைப்பட்டால் கூடுதலாக வழங்கப்படும் என அமைச்சர் அருண்ராஜ் கூறினார்.

கும்மிடிப்பூண்டியில் அரசு மருத்துவமனைக்கு டயாலிசஸ் செய்வதற்கான கருவி கூடுதலாக வழங்க வேண்டும் என எம்எல்ஏ விஜயகுமார் கோரிக்கை விடுத்தார். அதற்கு அமைச்சர் அருண்ராஜ், கும்மிடிப்பூண்டி அரசுமருத்துவமனையில் ஆய்வு செய்து தேவைப்பட்டால் டயாலிசஸ் கருவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

சட்டசபை நிகழ்வுக்கு பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் ஆய்வு நடத்தப்படும். அனைத்து மருத்துவமனைகளிலும் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அருண் ராஜ் தெரிவித்தார்.

# பவுர்ணமி, வார விடுமுறையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 3,710 சிறப்பு பஸ்கள் இயக்கம்!




சென்னை, ஆக. 27–

பவுர்ணமி, வார விடுமுறையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 3,710 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என்று அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

பவுர்ணமி மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 28–ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று 1,140 பஸ்களும், 29–ந் தேதி (சனிக்கிழமை) 1,020 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று (வியாழக்கிழமை) முதல் 29–ந் தேதி (சனிக்கிழமை) வரை ஒவ்வொரு நாளும் தலா 130 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, போளூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு 27 முதல் 29–ந் தேதி வரை ஒவ்வொரு நாளும் 90 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் 30–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) 690 சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 2 பில்லியன் டாலர் செலவில் அணுசக்தி நுண் உலைகள் - அமெரிக்க ராணுவம் அதிரடி!



அமெரிக்கா, ஆக. 27–

வணிக ரீதியான மின்சார கட்டமைப்பை சாராத, நம்பகமான ஆற்றல் மூலமாக நியூயார்க் முதல் டெக்சாஸ் வரையிலான ஐந்து ராணுவ தளங்களில் அணுசக்தி நுண்–உலைகளை (microreactors) சேர்க்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ராணுவம் அறிவித்தது.

டேட்டா சென்டர்களின் அதீத மின்சார தேவையை பூர்த்தி செய்ய பெரிய அணு உலைகளுக்கு பல பில்லியன் டாலர் கடன்களை வழங்குதல் மற்றும் ராணுவம் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான மேம்பட்ட உலை வடிவமைப்புகள் மற்றும் திட்டங்களை ஊக்குவிப்பதற்கான முன்னோடி திட்டம் என, அடுத்த தலைமுறை அணுசக்தி தொழில்நுட்பத்தை உருவாக்க டிரம்ப் நிர்வாகம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வரும் வேளையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தற்போது அமெரிக்காவில் வணிக ரீதியான மின்சார கட்டமைப்பிற்கு எந்தவொரு அணுசக்தி நுண்–உலையும் மின்சாரத்தை வழங்குவதில்லை. ராணுவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நிறுவனங்கள், செயல்திறன் சார்ந்த குறிப்பிட்ட மைல்கற்களை எட்டினால், இந்த நுண்–உலைகளை சொந்தமாக வைத்துக்கொள்ளவும், கட்டவும் மற்றும் இயக்கவும் ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 2.2 பில்லியன் டாலர் வரையிலான ஒப்பந்தங்களை பெறும். 20–க்கும் மேற்பட்ட அணுசக்தி நுண்–உலைகள் கட்டப்பட்டு இயக்கப்படும் என்று ராணுவம் எதிர்பார்க்கிறது.

மின்சார கட்டமைப்பு செயலிழக்கும் பட்சத்தில், ராணுவ தளங்களில் உள்ள முக்கியமான உள்கட்டமைப்புகளுக்கு நுண்–உலைகள் உறுதியான மின்சார ஆதாரத்தை வழங்குகின்றன என்று ராணுவம் மற்றும் தொழில் துறை அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த உலைகள் எரிபொருள் நிரப்பப்படாமலேயே பல ஆண்டுகள் இயங்கக்கூடியவை.

பாதுகாப்பான மற்றும் நம்பகமான அடிப்படை மின்சாரத்தை நேரடியாக தங்கள் தளங்களுக்கு வழங்கும் ராணுவத்தின் திறனை இந்த ஒப்பந்தங்கள் துரிதப்படுத்தும் என்று ராணுவ செயலாளர் டான் டிரிஸ்கோல் கூறினார்.

பாதுகாப்பற்றதாக அமையக்கூடிய வெளிப்புற மின்சாரக் கட்டமைப்புகளைச் சாராமல், உலகளவில் ராணுவச் செயல்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான ஆற்றல் உறுதித்தன்மையை நாங்கள் உருவாக்குகிறோம்," என்று அவர் கூறினார். அடுத்த தலைமுறை அணுசக்தியை வழங்குவதற்காக கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட ராணுவத்தின் "ஜானஸ் திட்டத்தின்" ஒரு பகுதியாக இந்த நிதியுதவி திட்டங்கள் அமைந்துள்ளன. மேம்பட்ட உலை வடிவமைப்புகள் வெறும் பரிசோதனைகள் மற்றும் முன்மாதிரிகளை தாண்டி, பல ஆண்டுகளுக்கு மின்சாரத்தை வழங்கும் நிலையை அடைய அணுசக்தி மேம்பாட்டை முன்னெடுத்து செல்ல அதிகாரிகள் நம்புகின்றனர்.

# தூத்துக்குடியில் த.வெ.க. போஸ்டரால் பரபரப்பு!




தூத்துக்குடி, ஆக. 27–

த.வெ.க. வெற்றிபெற்று ஆட்சி அமைத்த பின்னர் பல்வேறு கட்சிகளில் இருந்தும் முக்கிய பிரபலங்கள் மற்றும் பலர் த.வெ.க.வில் இணைந்து வருகிறார்கள். இதற்கிடையே த.வெ.க.வினர் சமீபகாலமாக அடுத்த பிரதமர் விஜய் என்று கூறி வருகின்றனர். இது த.வெ.க.வுடன் கூட்டணியில் உள்ள காங்கிரசாருக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாக தெரிகிறது. இதனை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் த.வெ.க.வினர் ரசிகர் மன்ற மனநிலையில் இருப்பதாக விமர்சித்துள்ளார். மேலும் ராகுல்காந்திதான் பிரதமர் வேட்பாளர் என்று உறுதியாக கூறி உள்ளார்.

இந்த நிலையில் தூத்துக்குடி மாநகரம் முழுவதும் முதல்–அமைச்சர் விஜய்யை வாழ்த்தி, அ.தி.மு.க.வில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்த சுதாகர் புகைப்படத்துடன் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு உள்ளன. அந்த போஸ்டரில், 'இன்றைய முதல்வர், நாளைய பிரதமர் விஜய்' என்றும், தூத்துக்குடி மத்திய மாவட்ட த.வெ.க. என்றும் எழுதப்பட்டு உள்ளது. இது மேலும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# ஆகஸ்ட் 28 சந்திர கிரகணம்: 12 ராசிகளுக்கு பலன்?



இந்த ஆண்டின் 2–வது மற்றும் கடைசி சந்திர கிரகணம் ஆகஸ்ட் 28–ம் தேதி நிகழ உள்ளது. இந்த கிரகணத்தை இந்தியாவில் பார்க்க முடியாது என்பதால், கிரகணத்திற்கான சூதக காலம் பொருந்தாது என ஜோதிட ரீதியாக கூறப்படுகிறது. இருப்பினும், சந்திர கிரகணத்தின் தாக்கம் 12 ராசிகளிலும் வெவ்வேறு விதமாக இருக்கலாம் என ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

**மேஷம்**

தொழில் தொடர்பான புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பயணங்களில் மட்டும் கூடுதல் கவனம் தேவை.

**ரிஷபம்**

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிகளை முடிக்க முடியும். தொழிலில் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். கிரகணத்திற்குப் பிறகு சிவாலய தரிசனம் செய்வது நல்லது.

**மிதுனம்**

கிரகணத்தின் தாக்கம் சாதகமாக அமையலாம். இருப்பினும் உடல்நலத்தில் கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். நீண்ட தூரப் பயணங்களில் எச்சரிக்கை அவசியம்.

**கடகம்**

வேலை மற்றும் தொழிலில் சில சவால்களை சந்திக்க நேரிடலாம். உடல்நலத்தில் கவனம் தேவை. தாய் மற்றும் வாழ்க்கைத்துணையின் நலனிலும் அக்கறை காட்டுவது நல்லது.

**சிம்மம்**

எதிர்பாராத உடல்நலப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தொழில் மற்றும் பணியிடத்தில் சில சவால்கள் வரலாம். கிரகணத்திற்குப் பிறகு அரிசி தானம் செய்வது நல்லது.

**கன்னி**

ஊடகம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் நிதானமாக செயல்பட வேண்டும். கருத்துகளை வெளிப்படுத்தும்போது கவனம் தேவை. உடல்நலம் மற்றும் உறவுகளில் கூடுதல் கவனம் அவசியம்.

**துலாம்**

பணப் பரிவர்த்தனைகளில் எச்சரிக்கை தேவை. தேவையற்ற நிதி நடவடிக்கைகளைத் தவிர்ப்பது நல்லது. வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. காதல் உறவுகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**

குடும்ப வாழ்க்கையில் சில குழப்பங்கள் ஏற்படலாம். நிதி விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. பண இழப்பு ஏற்படாத வகையில் செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது.

**தனுசு**

சாதகமான பலன்களை எதிர்பார்க்கலாம். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிகள் முடிவுக்கு வரும். தொழிலில் இருந்த தடைகள் நீங்கி, பதவி உயர்வுக்கான வாய்ப்புகளும் ஏற்படலாம்.

**மகரம்**

அவசரமாகவோ கோபத்திலோ எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். பேச்சிலும் செயலிலும் நிதானம் அவசியம். மேலதிகாரிகளுடன் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். தொழிலில் புதிய ரிஸ்க் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**

கிரகணத்தின் தாக்கம் உங்கள் ராசியில் இருப்பதால் கூடுதல் கவனம் தேவை. முக்கிய பணிகளை தள்ளிப்போடாமல் திட்டமிட்டு செயல்படுங்கள். உறவுகளில் ஏற்றத்தாழ்வுகளும் மன அழுத்தமும் ஏற்படலாம்.

**மீனம்**

மனதில் குழப்பம் மற்றும் குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படலாம். உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளைத் தவிர்க்கவும். வாகனம் ஓட்டும்போது நிதானத்துடன் செயல்படுவது அவசியம்.

**கிரகணத்திற்குப் பிந்தைய பரிகாரங்கள்**

சந்திர கிரகணத்திற்குப் பிறகு தானம் செய்வது, இறைவழிபாடு மேற்கொள்வது போன்றவை மனநிம்மதிக்கு உதவும் என ஜோதிட நம்பிக்கைகள் கூறுகின்றன. குறிப்பாக சில ராசிக்காரர்களுக்கு வெள்ளை நிறப் பொருட்கள், அரிசி, இனிப்புகள் தானம் செய்வது பரிகாரமாகக் குறிப்பிடப்படுகிறது.

**குறிப்பு:** ராசி பலன்கள் பொதுவான ஜோதிடக் கணிப்புகளின் அடிப்படையிலானவை. தனிப்பட்ட பலன்களுக்கு பிறந்த தேதி, நேரம் மற்றும் இடத்தின் அடிப்படையிலான ஜாதகப் பரிசீலனை அவசியம்.




# பிரசவத்துக்குப் பிறகு மனநலப் பிரச்சினையா?



பிரசவத்துக்குப் பிறகு பெண்களுக்கு ஹார்மோன் மாற்றங்கள், தூக்கமின்மை, உடல் சோர்வு, குழந்தையைப் பராமரிக்கும் புதிய பொறுப்பு உள்ளிட்ட காரணங்களால் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு இது தீவிர மான மனநலப் பிரச்சினையாக மாறும் வாய்ப்பும் உள்ளது.

**'பேபி ப்ளூஸ்' அறிகுறிகள்:**

அழுகை, எரிச்சல், பதற்றம், மனநிலை மாற்றம், தூக்கப் பிரச்சினைகள் போன்றவை பொதுவாக குறுகிய காலத்தில் குறையலாம்.

**பிரசவத்துக்குப் பிந்தைய மனச்சோர்வு:**


நீண்டகால சோகம், நம்பிக்கையின்மை, அதிகப்படியான பதற்றம், வழக்கமான செயல்களில் ஆர்வம் குறைதல், குழந்தையுடன் நெருக்கமாக இருக்க முடியாத உணர்வு போன்றவை தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனை அவசியம்.

**போஸ்ட்பார்டம் சைக்கோசிஸ்:**

மாயத்தோற்றம், உண்மைக்கு மாறான நம்பிக்கைகள், கடுமையான குழப்பம், சந்தேகம், தீவிர பதற்றம் அல்லது வழக்கத்திற்கு மாறான நடத்தை போன்றவை ஏற்படலாம். இது அரிதானது என்றாலும் அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தீவிர நிலை.


தனக்கோ அல்லது குழந்தைக்கோ தீங்கு ஏற்படுத்தும் எண்ணங்கள் இருந்தால், அதை மறைக்காமல் உடனடியாக மருத்துவ அல்லது மனநல நிபுணரிடம் உதவி பெற வேண்டும். குடும்பத்தினரும் அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல் ஆதரவாக இருப்பது முக்கியம்.

**முக்கியம்:** பிரசவத்துக்குப் பிந்தைய மனநலப் பிரச்சினைகள் சிகிச்சையளிக்கக்கூடியவை. உதவி கேட்பது பலவீனம் அல்ல.



## சினிமா துளிகள்..!

# 'நான் ரெடி' - சீமானுக்காக நான் நிற்பேன்- விஜயலட்சுமி எச்சரிக்கை!



நடிகை விஜயலட்சுமி சமீப நாட்களாக மீண்டும் தனது சமூக வலைத்தளங்களில் வீடியோ வெளியிட்டு வருகிறார். வலைத்தளங்களில் சீமானை விமர்சிக்கும் போது விஜயலட்சுமி மீதும் தனிப்பட்ட தாக்குதல்கள் நடத்தப்படுவது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை தனது வீடியோவில் வெளிப்படுத்தி வரும் விஜயலட்சுமி, சமீபத்தில் வெளியிட்ட வீடியோவில், தவெகவினரை மறைமுகமாக எச்சரித்துள்ளார். விஜயலட்சுமி தனது வீடியோவில் கூறியிருப்பதாவது;

**என்னை யாராலும் விலைக்கு வாங்க முடியாது**

இன்னைக்கு நாம் தமிழர் கட்சிக்கு நான் சப்போர்ட்டிவா பேசன உடனே அடுத்து சொல்லிடுவாங்க, 'நாம் தமிழர் கட்சியோட ஒருங்கிணைப்பாளர் ஒரு பெரிய தொகையை விஜயலட்சுமிக்கு செட்டில் பண்ணிட்டாரு, அதான் அவங்க அந்த பக்கம் பேசிட்டாங்க' அப்படின்னு. ஒன்னும் கிடையாது, என்னை இதுவரைக்கும் பணம் கொடுத்து யாராலும் விலைக்கு வாங்க முடியாது.

**'சீமானுக்காக பேசுவேன்..'**

எனக்கு தப்புன்னு தோணுச்சுன்னா நானே பேசுவேன். நான்தான் இத்தனை நாள் நாம் தமிழர் கட்சியை எதிர்த்துட்டு இருந்தேன் இல்லையா? ஆனா நான் ஒரு வாரமா பார்க்கிறேன். ஒருத்தங்க தப்பு பண்ணதை தப்புன்னு உணர்ந்து, அவங்க திரும்பவும் ஒரு வாய்ப்பு கேட்கும்போது அவங்களை வாழ விடணும், அதுதான் மனிதநேயமுன்னு சொல்றது. அதைதான் நான் பண்ணேன். ஆனா நானும் பார்க்கிறேன், சும்மா பேச்சு எடுத்தா என்னையும் கொச்சைப்படுத்திக்கிட்டு, நாம் தமிழர் கட்சியையும் கொச்சைப்படுத்திட்டு நீங்க இதுதான் பண்ணிட்டு இருக்கப் போறீங்கன்னா 'ஐ அம் ரெடி'.

இனிமேல் என்னோட வழக்கை பத்தி நீங்க யாராவது கொச்சையா பேசுனீங்கன்னா, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானுக்காக உறுதியா பேசுவேன்' என்றார். தவெகவினரை நேரடியாக விஜயலட்சுமி குறிப்பிடா விட்டாலும், அவரது விமர்சனம் தவெகவினரை குறிவைத்தே இருப்பதாக நெட்டிசன்கள் பதிவிட்டு வருகிறார்கள்.

# நாட்டின் 7 முக்கிய ரெயில் வழித்தடங்கள் மேலும் விரிவாக்கம்- மத்திய ரெயில்வே அமைச்சர் தகவல்!



புதுடெல்லி, ஆக. 27–

இந்திய ரெயில்வேயில் 7 ரெயில் வழித்தடங்களில் அதிக அளவில் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை நாட்டின் மொத்த ரெயில் போக்குவரத்தில் 41 சதவீதத்தை கையாள்வதில் முக்கிய பங்கை வகிக்கிறது. சுமார் 11 ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்த வழித்தடங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அவற்றை 4 ரெயில் பாதைகளாக விரிவுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை திறம்பட கையாளும் நோக்கில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருப்பதாக மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.


இதுகுறித்து, மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வீடியோ வெளியிட்டு பேசியதாவது:–

டெல்லி ஹவுரா, ஹவுரா சென்னை, சென்னை மும்பை, மும்பை டெல்லி, டெல்லி சென்னை, மும்பை ஹவுரா மற்றும் டெல்லி கவுகாத்தி ஆகிய 7 வழித்தடங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு 4 ரெயில் பாதைகளாக மாற்றப்பட இருக்கிறது. இதன் மூலம் நாட்டின் நெரிசல் மிகுந்த வழித்தடங்களில் ரெயில் சேவைகள் மேம்படுத்தப்படும். மேலும், போக்குவரத்து செலவு குறைக்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறை ஊக்குவிக்கப்படும்.

இந்த முக்கிய வழித்தடங்களை 4 பாதைகளாக விரிவுபடுத்துவது, எதிர்கால பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து வளர்ச்சிக்கு தேவையான கூடுதல் திறனை உருவாக்கும் முக்கிய நடவடிக்கையாகும். அதிக திறன், குறைந்த போக்குவரத்து செலவு மற்றும் தூய்மையான போக்குவரத்தை நோக்கமாகக் கொண்டு இந்திய ரெயில்வே தொடர்ந்து முன்னேறி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ரெயில்வே துறையில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ரெயில்வேயின் இந்த உள்கட்டமைப்பு மேம்பாடு மிக முக்கியமானதாகும்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

# தேர்தல் விழிப்புணர்வு மாநாடு: சென்னை வருகிறார் தலைமை தேர்தல் கமிஷனர்!



சென்னை, ஆக. 27–

சென்னையில் நடைபெறும் மண்டல மாநாட்டில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மாணவர்களிடையே உரையாற்றவும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் (BLOs) கலந்துரையாடவும் உள்ளார்.

**மண்டல மாநாடு**

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் இன்று (27–ம் தேதி) சென்னைக்கு வருகை தந்து, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ள 'தேர்தல் விழிப்புணர்வு மன்றங்கள் மற்றும் ECINET' குறித்த மண்டல மாநாட்டிற்கு தலைமை வகித்து, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் நேரடி கலந்துரையாடல் நடத்த உள்ளார்.

**டிஜிட்டல் தளங்கள்**

இந்திய தேர்தல் ஆணையத்தால், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியுடன் ஒருங்கிணைந்து 'ஜனநாயகத்தை கற்போம், ஜனநாயகத்தை வழிநடத்துவோம்' என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்படும் இந்த முன்னெடுப்பானது, வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்துதல், வருங்கால வாக்காளர்களிடையே அரசியலமைப்பு விழிப்புணர்வை வளர்த்தல் மற்றும் தேர்தல் பணிகளுக்கு டிஜிட்டல் தளங்களை பயன்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

**300 பள்ளிகள், 75 கல்லூரிகள்**

இன்று (வியாழக் கிழமை) முழுவதும் நடைபெறும் இந்நிகழ்வில் துணைத் தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு, தலைமை இயக்குநர் (ஊடகம்) ஆஷிஷ் கோயல் மற்றும் தலைமை இயக்குநர் (தகவல் தொழில்நுட்பம்) சீமா கண்ணா உள்ளிட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் உயர்மட்டக் குழுவினர் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 300 பள்ளிகள், 75 கல்லூரிகள் மற்றும் 25 பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்து வப்படுத்தும் மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் என சுமார் 1,000 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

**500 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்**

மேலும் துணை மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட கல்வி அதிகாரிகள் மற்றும் துறைசார் மூத்த அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலர்களும் இதில் பங்கேற்கிறார்கள். இன்று காலை அமர்வில், இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் சுமார் 500 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் கலந்துரையாடி, கள அளவிலான வாக்காளர் சேர்க்கை, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் களப்பணி சார்ந்த கருத்துக்களை கேட்டறிவார்

**கேள்வி–பதில் அமர்வு**

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் ஜனநாயக பங்களிப்பு மற்றும் தேர்தல் விழிப்புணர்வு குறித்து உரையாற்றி, அதைத் தொடர்ந்து நடைபெறும் கேள்வி–பதில் அமர்வில் பங்கேற்பார். மேலும், இந்த மாநாட்டில் வாக்காளர் பதிவு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளை நேரடி செயல்விளக்கங்கள், கலந்துரையாடல் கண்காட்சி பலகைகள், தேர்தல் வினாடி வினாக்கள் மற்றும் ELC 2.0, ஒருங்கிணைந்த ECINET செயலி போன்ற தொழில்நுட்பத் தளங்களின் பயன்பாடுகளும் இடம்பெறும்.

# ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தப்படாவிட்டால் போராட்டம்: தொழிலாளர் சங்கம் அறிவிப்பு!



சென்னை, ஆக. 27–

ஆட்டோ – டாக்சி தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் எஸ். பாலசுப்பிரமணி யம் சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது, அவர் நிருபர்களிடம் கூறியதாவது;–

தமிழ்நாட்டில் கடந்த 13 ஆண்டுகளாக ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தப்படவில்லை. 2022–ம் ஆண்டு ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்பின்படி, விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மீட்டர் கட்டணத்தை மாற்றியமைத்து, அதை மக்களுக்கும் ஓட்டுனர்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையில் தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போக்குவரத்து அமைச்சர் தலைமையில் கடந்த 9–ந்தேதி நடைபெற்ற கூட்டத்தில், முதல்–அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்தி தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. நாங்கள் 1.5 கிலோ மீட்டருக்கு ரூ.60–ம், அடுத்த ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.30–ம், காத்திருப்பு கட்டணமாக ஒரு நிமிடத்துக்கு ஒரு ரூபாயும், இரவு நேர கட்டணமாக 1½ மடங்கும் நிர்ணயிக்க வேண்டும் என்று விரிவான மனு அளித்துள்ளோம்.

இந்த கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எம்.எல்.ஏ.க்களை சந்தித்து மனு கொடுத்துள்ளோம். நாளை 27–ந்தேதி ( போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் இது தொடர்பாக கூட்டம் நடைபெற உள்ளது. அதில் கட்டண உயர்வு குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஒருவேளை அறிவிப்பு வெளியாகவில்லை என்றால், வருகிற 28–ந்தேதி நடை பெறவுள்ள போக்குவரத்துமானியக் கோரிக்கையின் போது முதல்–அமைச்சர் இந்த கட்டண உயர்வை அறிவிப்பார் என்று நம்புகி றோம். அவ்வாறு அறிவிக்கப்படா விட்டால், 29–ந்தேதி அனைத்து சங்க ங்களும் கூடி ஆலோசித்து வலுவான போராட்டத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பெற்றோரை கவனிக்காத பிள்ளைகளை வீட்டில் இருந்து வெளியேற்றலாம்!



லக்னோ, ஆக. 27–

தங்களைப் பராமரிக்காமலும், மதிக்காமலும் இருக்கும் பிள்ளைகளை தங்கள் வீட்டில் இருந்து வெளியேற்ற முதிய பெற்றோரை அனுமதிக்கும் வகையில், 'உத்தரப் பிரதேச பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் நல விதிகள்–2014'–ஐத் திருத்த யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. நேற்று நடைபெற்ற உத்தரப் பிரதேச அமைச்சரவைக் கூட்டத்தில்இந்தமுடிவுஎடுக்கப்பட்டதாக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி, வயதான பெற்றோரை கவனிக்க தவறினாலோ அல்லது ஏதேனும் ஒரு வகையில் துன்புறுத்தினாலோ, பிள்ளைகளை வீட்டில் இருந்து வெளியேற்ற முடியும். வயதான பெற்றோரால் நேரில் புகார் அளிக்க முடியாது என்பதால், இது குறித்து புகார் தெரிவிக்க, விரைவில், கட்டணமில்லா தொலைபேசி எண் (toll-free number) அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

மாவட்ட கலெக்டரிடம் அளிக்கப்படும் புகார்கள் மீது 30 நாட்களுக்குள் விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இது குறித்த மாதாந்திர அறிக்கையை கலெக்டர்கள் மாநில அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும். வயதான பெற்றோரின் உரிமைகளை பாதுகாத்து, அவர்களுக்கு மரியாதையான வாழ்க்கையை வழங்குவதோடு, குடும்பத்தினரிடையே அவர்களை பராமரிக்கும் பொறுப்புணர்வை அதிகரிப்பதே இந்த திருத்தத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## சாகித்ய அகாடமியில் 30 பணியிடங்கள்!

நிறுவனம்: சாகித்ய அகாடமி (Sahitya Akademi)
அறிவிப்பு எண்: 50/2/2026
பணி வகை: மத்திய அரசு பணி | நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்: 30
காலியிடங்கள்:
Deputy Secretary (General–Admin.)
Assistant Editor
Senior Library & Information Assistant
Junior Translation Officer
Technical Assistant
Programme Assistant
Publication Assistant
Proof Reader
General Assistant
Stenographer Gr. II
Messenger
Rider / Van Driver
Junior Clerk
Multi–Tasking Staff (MTS)
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 22.08.2026
கடைசி நாள்: 21.09.2026
விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: சாகித்ய அகாடமி
sahitya-akademi.gov.in

# கள ஆய்வு இல்லாமல் மின் இணைப்பு!



சென்னை, ஆக. 27–

அனைத்து தலைமை என்ஜினீயர்கள், மேற்பார்வை என்ஜினீயர்களுக்கு தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும்போது தேவையான ஆவணங்களுடன், மின்சார இணைப்பு வழங்க வேண்டிய இடத்தின் ஜி.பி.எஸ். இருப்பிட குறியீடுகளை விண்ணப்பதாரரே பதிவு செய்ய வேண்டும். ஆவணங்களின் அச்சு நகல்களை கட்டாயமாக சமர்ப்பிக்க கூடாது.

விண்ணப்பதாரர் அளிக்கும் ஜி.பி.எஸ். தகவல்கள் (செயற்கைக்கோள்கள் மூலம் பூமியில் எங்கு இருக்கிறோம் என்பதைத் துல்லியமாகக் கண்டறியும் வழிகாட்டு அமைப்பு) புவியியல் அமைப்பு வரைபடங்களுக்கான ஜி.ஐ.எஸ். செயலி மூலம் சரிபார்க்கப்படும். தகவல்கள் சரியாக இருந்தால் கள ஆய்வு இல்லாமல் விண்ணப்பம் அடுத்தகட்டத்துக்கு அனுப்பப்படும்.

சரிபார்ப்பில் தோல்வி ஏற்பட்டால், வழக்கமான கள ஆய்வு நடைமுறை மேற்கொள்ளப்படும். ஜி.பி.எஸ். சரிபார்ப்பு முடிந்ததும், மதிப்பீடு செய்யப்பட்டு, மின்சார இணைப்பு வழங்கும் பணியின்போது மீட்டர் பொருத்தப்படும் இடத்தின் உண்மையான ஜி.பி.எஸ். தகவலும் பதிவு செய்து சரிபார்க்கப்படும். பின்னர் மீட்டர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு இணைப்பு வழங்கப்படும்.

விண்ணப்பத்தின் நிலை மற்றும் மாற்றங்கள் குறித்த தகவல்களும் விண்ணப்பதாரருக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் அல்லது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படும். இந்தப் புதிய நடைமுறை நாளை (வெள்ளிக்கிழமை) முதல் இணையதளத்தில் பதிவு செய்யப்படும். இது புதிய விண்ணப்பங்களுக்கு மட்டும் பொருந்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882


மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்

### ஆந்திராவில் அதிகார மோதல்!




# மகளிர் இலவச பஸ்களில் 'வெற்றி பயணம்' பெயர் பலகை!



சென்னை, ஆக. 27–

மகளிர் இலவச பயண திட்டத்தின் விரிவாக்க த்தின்படி, மாநகர, நகர பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண, சொகுசு பஸ்களிலும், மாவட்டங்களுக்கு இடையே பயணம் மேற்கொள்ளும் புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில், சாதாரண கட்டண பஸ்களிலும், வரும் அக்டோபர் 2–ம் தேதி முதல் மகளிர் இலவச பயணம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மகளிர் இலவச பயண பஸ்களை அடையாளம் காணும் வகையில், 'வெற்றி 'பயணம்' என்ற 'டிஜிட்டல்' பலகை அமைக்கப்பட உள்ளது. இதுகுறித்து, போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது:–

மகளிர் இலவச பயண திட்டத்தின்படி, சென்னையில் 3,633 பஸ்களிலும், மாவட்டங்களில் 9,000–க்கும் மேற்பட்ட பஸ்களிலும் பயணம் செய்யலாம். இதற்கான வழிகாட்டு முறைகளை, தமிழக அரசு விரைவில் வெளியிடும். மகளிர் இலவச பயண பஸ்களை அடையாளம் காணும் வகையில் மாநகரங்களில், 'வெற்றி பயணம்' என பெயரிட்டு, டிஜிட்டல் பலகையுடன் பஸ்கள் இயக்கப்படும்.

மாவட்ட பஸ்களில், 'மகளிர் கட்டணம் இல்லா பயணம்'' என, குறிப்பிட முடிவு செய்துள்ளோம். இந்த பஸ்களுக்கு பிரத்யேக வண்ணம் பூசுவது குறித்து தமிழக அரசு முடிவெடுக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நேபாளில் தவிக்கும் தமிழர்கள் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம்: முதலில் உறுப்பினர்கள் பேச அனுமதிக்குமாறு அமளி!



சென்னை, ஆக. 27–

சட்டசபையில் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் எதிர்க்கட்சித் தலைவரே முதலில் பேசட்டும் என அமைச்சர் ராஜ்மோகன் பரிந்துரைத்த நிலையில் சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

தமிழ்நாடு சட்டசபை ஒருநாள் விடுமுறை பின் கூடியது.சபைகூட்டத்தொடர் தொடங்கியதும் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு துறைசார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்தனர். இதனை தொடர்ந்து பள்ளிக்க ல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன், நேபாளத்தில் பெரு வெள்ளம் தொடர்பாக விளக்கம் அளிக்க தொடங்கினார்.

அதற்கு நேபாளம் பெரு வெள்ளம் தொடர்பாக சபையில் கவன ஈர்ப்பு கொடுக்கப்பட்ட நிலையில், அதற்கு முன்பாகவே அமைச்சம் விளக்கம் அளிப்பதற்கு திமுக, அதிமுக உள்ளிட்ட உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

இதற்கு சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், நாட்டையே உலுக்கிய சம்பவம் தொடர்பாக அமைச்சர் ராஜ்மோகன் முன்னால் பேசினால் என்ன, பின்னால் பேசினால் என்ன?. நாங்கள் கவனத்திற்கு கொண்டு வந்ததால் தான் அமைச்சர் பதிலளிக்கிறார் என்பதல்ல என்றார். அதற்கு எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிய பின்னர் அமைச்சர் பதிலளிப்பது தான் முறையாக இருக்கும் என்று திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அரசிற்கு கவனத்திற்கு கொண்டுவருவதற்கு முன்பே அமைச்சர் பதிலளிப்பதா?. அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம் அதன் பின்னர் விளக்கம் அளியுங்கள் என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறினார். அதற்கு, சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், அமைச்சர் பேசிய பின் உறுப்பினர்கள் கேள்வி கேட்பதில் ஒன்றும் தவறில்லையே என்றார்.

மேலும் கரூர் சம்பவம் நடந்தபோது இதே சபையில் முதலமைச்சர் பேசிய பின்னர் கேள்வி கேளுங்கள் என நடந்ததாக சபாநாயகர் விளக்கம் அளித்தார்.

இருப்பினும் சட்டசபையில் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் எதிர்க்கட்சித் தலைவரே முதலில் பேசட்டும் என அமைச்சர் ராஜ்மோகன் பரிந்துரைத்த நிலையில் சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

# தேர்தல் வழக்குகள்! நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா மனு தாக்கல்!



சென்னை, ஆக. 27–

தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வியாழக்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு முதல்வர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து, வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இதேபோல் திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்குகள் கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, நிராகரிப்பு மனு தாக்கல் செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த வழக்கு நீதிபதி வி. லட்சுமிநாராயணன் முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தங்களுக்கு எதிரான தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, முதல்வர் விஜய்யின் வெற்றிக்கு எதிராக பெரம்பூரைச் சேர்ந்த வாக்காளர் தினேஷ் மற்றும் வில்லிவாக்கம் தொகுதியில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

அதேபோல், திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தாக்கல் செய்த வழக்கு மற்றும் விஜய்யின் வெற்றியை எதிர்த்து பெரம்பூர் தொகுதி வாக்காளர் லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தொடர்ந்த வழக்குகளை வரும் திங்கள்கிழமைக்கும் ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# ஜென்-ஸீ, ஜென்-ஆல்ஃபா இளையோருக்கு தேர்தல் விழிப்புணர்வு: ஆணையம் நடவடிக்கை!



சென்னை, ஆக. 27–

2029 மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக ஜென்–ஸீ, ஜென்–ஆல்ஃபா இளையோர் இடையே தேர்தல், வாக்களிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை தேர்தல் ஆணையம் மீண்டும் தொடங்கியுள்ளது.

தேர்தல் நடைமுறைகளை நன்கு அறிந்த வாக்காளர்களாக இளம் தலைமுறையினரை உருவாக்குவதுடன், எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரசாரங்களை முன்னெடுக்கக்கூடியவர்களாக அவர்களைத் தயார்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த பிரசாரத்தின் ஒரு பகுதியாக, இந்தியா முழுவதும் உள்ள 4,123 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 9 முதல் 12–ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை தேர்தல் ஆணையம் மையமாகக் கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க இருக்கிறது.

இதற்காக, நாடு முழுவதும் உள்ள 5 லட்சம் பள்ளிகள், 70,000 கல்லூரிகள், 1,400 பல்கலைக்கழகங்களை தேர்தல் ஆணயம் அணுக இருக்கிறது. நாட்டில் 18 முதல் 26 வயதுக்குள்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 14.78 கோடி. இதில் 7.98 கோடி ஆண்கள், 6.79 கோடி பெண்கள் மற்றும் 9,000 மூன்றாம் பாலினத்தவர் உள்ளனர்.

# "செய்யக்கூடாதவற்றை செய்யாமல் இருந்தால், காவல் துறைக்கு வேலையே இருக்காது"!



மதுரை, ஆக. 27–

ஸ்ரீராம் இலக்கியக் கழகம் சார்பில் மதுரைக் கல்லூரியில் 22 ஆகஸ்ட் 2026 அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் மொத்தம் 352 மாணவர்கள் கலந்து கொண்டனர். பேச்சுப் போட்டியில் 132 பேரும், ஓவியப் போட்டியில் 132 பேரும், கட்டுரைப் போட்டியில் 88 பேரும் பங்கேற்றனர்.வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இணைய வழி குற்றப் பிரிவுக்கான மதுரை மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. டி. சந்திர குமார் பரிசுகளை வழங்கிப் பேசினார். தனது உரையில் அவர், "மாணவர்கள் அறம் தரும் செயல்களையே செய்ய வேண்டும். பிறருக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தச் செயல்களையும் செய்யக்கூடாது. செய்யக்கூடாத செயல்களைச் செய்யாமல் இருந்தால் காவல் துறைக்கு வேலையே இருக்காது'' என்றார். தனக்குப் பிடித்த திருக்குறளாக "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற'' என்பதைக் குறிப்பிட்டார். மேலும் தற்போது இணைய வழி குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும், இதுவரை 2000 கோடி ரூபாய்கும் மேல் மக்கள் இழந்துள்ளதாகவும் தெரிவித்தார். வங்கிக் கணக்கு, சிம் கார்டுகளை பிறருக்கு கொடுப்பது போன்றவற்றை செய்ய வேண்டாம் என்றும், சைபர் குற்றம் நடந்தால் உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.நிகழ்ச்சிக்கு மதுரைக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சேவியர் தலைமை தாங்கினார். ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் முதுநிலை துணைப் பொது மேலாளர் திரு. கே. பசுபதி முன்னிலை வகித்தார். மதுரைக் கோட்ட மேலாளர் திருமதி பி. வி. மல்லிகா வரவேற்புரை ஆற்றினார்.

முதல் பரிசு பெற்றவர்கள் விவரம்:

பேச்சுப் போட்டி: இடைநிலை – அ. மஞ்சு ஸ்ரீ, மேல்நிலை – ரா.வீ. சிவவைணவின், கல்லூரி – மு. மணிவாசகம் ஓவியப் போட்டி: இடைநிலை – கு.பரத் சஞ்சய், மேல்நிலை – தா.ஹரிஹரன், கல்லூரி – எம். பர்ஹானா கட்டுரைப் போட்டி: இடைநிலை – சு. இந்திரபாலா, மேல்நிலை – ம. ஹாசினி, கல்லூரி – மு.ரோஜா பரிசு பெற்றவர்கள்

# திருப்பூர் குப்பை பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு: முதல்வரை சந்திக்க அனைத்து கட்சிகளும் முடிவு!



திருப்பூர், ஆக. 27–


திருப்பூர் மாநகரில் நீடித்து வரும் குப்பை பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண, தமிழக முதலமைச்சரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்க அனைத்து கட்சிகளும் முடிவு செய்துள்ளன. திருப்பூரில் நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். கிராமப்புற பாறைக்குழிகளில் மாநகராட்சி குப்பைகளை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய பொதுமக்கள் கைது செய்யப்பட்டதற்கு கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மையை கண்காணிக்க ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் தனிக்குழு அமைக்க வேண்டும், ஒன்றிய அரசு சிறப்புநிதி ஒதுக்க வேண்டும், போராட்டக்காரர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

பொதுமக்கள் வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்றும், புதிய நடைமுறையின்படி தனித்தனி குப்பைத்தொட்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொறுப்பு மேயரும் துணை மேயருமான பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். உயிரி எரிவாயு தயாரிப்பு மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுக்கும் நவீன இயந்திரங்கள் வாங்க டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குப்பை மேலாண்மை பிரச்சனைக்கு வரும் டிசம்பர் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரிக்குள் தீர்வு காணப்படும் என நம்பிக்கை தெரிவித்த அவர், பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும், போராட்டப் பகுதிகளில் அமைதி காக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# பிரபல ஹரியான்வி பாடகர் அங்கித் பால்யான் சுட்டுக்கொலை!



உத்தரப் பிரதேச மாநிலம் ஷாம்லி மாவட்டத்தில், பிரபல ஹரியான்வி பாடகரும் யூடியூபருமான 32 வயதான அங்கித் பால்யான் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை ஷாம்லி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள உடற்பயிற்சி கூடத்திலிருந்து அங்கித் பால்யான் தனது காரை நோக்கி வெளியே வந்தபோது இச்சம்பவம் நடந்துள்ளது. இருசக்கர வாகனங்களில் வந்த 4 பேர் கொண்ட மர்ம கும்பல், அங்கித்தை இலக்கு வைத்து சுமார் 18 முதல் 20 சுற்றுகள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020